# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 12,207 — 1960 සැප්තැම්බර් 30 වැනි සිකුරාදා — 30.9.1960**

12,207 ம் இலக்கம்—1960 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 30 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — | ஆயவிற்பனையும் குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | — | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 237 | அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகளைப்பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும், பிறவும் .. .. | — | நாணுவிதம் .. .. .. | — |


## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### நீர்ப்பாசனத்துறை

மட்டக்களப்பிலேயுள்ள கிழக்குப்பிரிவுப் பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தைப் பெருப்பிப்பதற்கான கேள்விப் பத்திரங்கள் வேண்டப்படுகின்றன. மேற்படி கேள்விப்பத்திரங்கள், கொழும்பு 1 ல் உள்ள செயலகத்தின் 355 ஆம் இலக்க அறையிலுள்ள கமத்தொழில், காணி அமைச்சின் கேள்விப்பத்திரச் சபைத்தலைவர் அவர்களால் 1960 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 1 ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

நீர்ப்பாசனத்துறையில் அல்லது புகையிரதப் பகுதியில் அல்லது பொது மராமத்து இலாகாவில் ரூபா 90,000 க்கும் அதற்கு மேலும் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே மேற்படி கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கத் தகுதியுடையோராவர். நீர்ப்பாசன அதிபரின் அலுவலகத்திலோ அல்லது எந்தக் கச்சேரியிலோ ரூபா 100 கட்டுப் பணமாகக் கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தே மட்டக்களப்பிலுள்ள கிழக்குப் பிரிவுப் பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தில் 1960 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 28 ம் திகதி வெள்ளிக்கிழமை வரைக்கும் அலுவலக வேலை நேரங்களில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

மேற்கொண்டு விபரங்களுக்கு கிழக்குப்பிரிவு பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரிடமிருந்து அறிந்து கொள்ளலாம்.

பி. செல்லதேவா,
நீர்ப்பாசன அதிபருக்காக.

கொழும்பு
1960 ம் ஸ்ரீ செப்டெம்பர் மீ 21 ந் வ.

9519.

---

### உணவுப்பகுதி

#### மனிங் மார்க்கட் போசனசாலை

1. மனிங் மார்க்கட் உத்தியோகத்தருக்கும், அங்கு வேலை செய்வோருக்கும், மனிங் மார்க்கட் கூட்டுறவுத் தொழிலாளர் சங்க உத்தியோகத்தருக்கும், அச்சங்க அங்கத்தவருக்கும், போசனம், சிற்றுண்டி முதலியன 25.10.60 தொடக்கம் ஒரு வருட காலத்திற்கு வழங்குவதற்கான கோரிக்கைகள் முத்திரை அச்சிடப்பட்டு, காகித உறையின் இடது மேற்பாகத்தில் "மனிங் மார்க்கட் போசனசாலைக்கான கோரிக்கைகள்" என எழுதப்பட்டும் 15.10.60 ந் திகதி நண்பகல் 12 மணிவரைக்கும் என்னுல் ஏற்றுக் கொள்ளப்படும்.

2. கோரிக்கைகள் இரு பிரதிகளில் செய்யப்பட்டு, ஒரு உறையில் முத்திரை அச்சிடப்பட்டு, உதவி உணவுக்கட்டுப்பாட்டதிகாரி, மனிங் மார்க்கட், கொழும்பு 11 என விலாசமிடப்படல் வேண்டும்.

3. கோரிக்கைகாரர் எல்லா உணவு வகைகளினதும், சிற்றுண்டிகளினதும் விலை விபரங்களைக் கோரிக்கைப் பத்திரத்தில் காண்பதற்கேற்பக் குறிப்பிடல் வேண்டும்.

4. எல்லா உணவுகளும் காரியாலய எல்லைக்குள் சமைப்பதற்கென ஒதுக்கப்பட்ட சமையலறையில் சமைக்கப்படவேண்டும். சித்தியடையும் கோரிக்கைகாரர் தமது சொந்த (மின்சார, புகை, மண்ணெண்ணெய் அல்லது வேறு எண்ணெயின்) செலவைச் செலுத்தல் வேண்டும்.

5. கோரிக்கை ஏற்கப்பட்டதாகத் தகவல் கிடைத்த மூன்று நாட்களுக்குள் சித்தியடைந்த கோரிக்கைகாரர், உணவு அதிகாரியின் காரியாலயத்தில் கட்டுப்பணமாக ரூ. 100 செலுத்த வேண்டும். இக்கட்டுப் பணமாகச் செலுத்தப்பட்ட தொகை, ஒப்பந்தத்தைத் திருப்திகரமாகச் செய்வதற்குப் பிணையாக வைத்திருக்கப்படும். அவ்வொப்பந்தத்திற் சொல்லப்பட்ட காலத்துக்குள் சித்தியடைந்த கோரிக்கைகாரர் திருப்திகரமாக வேலையை முடிக்கவோ அல்லது செய்யவோ தவறின் நஷ்ட ஈடு செலுத்த நேரிடும். உணவு அதிகாரியின் திருப்திக்கு முடிவுறும் காலத்தில், ஒப்பந்தம் நிவிர்த்தி செய்யப்பட்டிருப்பின் கட்டுப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

6. சித்தியடையும் கோரிக்கைகாரர் போசனசாலை வாடையாக மாதமொன்றுக்கு ரூ. 35 செலுத்தி, போசனசாலை நடத்துவதற்கான (லைசென்ஸ்) அதிகாரப்பத்திரப் பணமும் மாநகரசபைக்குச் செலுத்தல் வேண்டும்.

7. எவ்வொரு கோரிக்கையையோ, அல்லது எல்லாக் கோரிக்கைகளையுமோ நிராகரிக்கும் உரிமை உணவு அதிகாரிக்கு உண்டு.

8. கோரிக்கை ஏற்கப்பட்டதும், கட்டுப்பணம் செலுத்தி ஒப்பந்தக்காரர் உணவு அதிகாரியுடன் ஒப்பந்தம் எழுதிக்கொள்ளலாம், ஒப்பந்தப்பத்திரத்திற்குத் தேவையான முத்திரைச் செலவை ஒப்பந்தக்காரர் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

9. சித்தியடையும் கோரிக்கைகாரர், போசனசாலையில் உணவு அல்லது சிற்றுண்டி அருந்துபவர்களுடன் மரியாதையுடனும், கௌரவத்துடனும் பழகிக்கொள்ளவேண்டும்.

10. சித்தியடையும் கோரிக்கைகாரர், போசனசாலையில் பகிரங்கமாக விலைப்பட்டியல் ஒன்றை மூன்று மொழிகளிலும் பார்வைக்கு வைத்தல் வேண்டும்.

11. கோரிக்கை செய்யப்பட்ட விலைகள் சமமாகப் போசனசாலையைப் பாவனைசெய்யக்கூடியவர்கள் எல்லோருக்கும் அமுல்நடத்தல் வேண்டும்.

12. சித்திபெறும் கோரிக்கைகாரர், போசனசாலை இருக்கும் இடம், மேசை, கோப்பை, பீங்கான், கரண்டி, முள் மற்றும் சமையலறையில் பாவிக்கும் பொருட்கள் ஆகியவற்றைச் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும்.

கே. எம். டி. ஜயனெத்தி,
உணவு அதிகாரி.

கொழும்பு 2,
1960 ம் ஸ்ரீ புரட்டாதி மீ 27 ந் வ.

9138.

## விளம்பரம்

1960 ம் ஆண்டு ஐப்பசி (ஒக்ரோபர்) மாதம் 19 ந் திகதி புதன்கிழமை அரசாங்க விடுமுறையாக இருப்பதால், 1960 ம் ஆண்டு ஐப்பசி (ஒக்ரோபர்) மாதம் 21 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1960 ம் ஆண்டு ஐப்பசி (ஒக்ரோபர்) மாதம் 15 ந் திகதி சனிக்கிழமை பி.ப. 12.30 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேர வேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1960 ம் ஆண்டு புரட்டாதி (செப்டெம்பர்) மீ 27 ந் வ.

பேர்னாட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது